| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 18.08.2026 | |
| CC No. 53/2026 | |
| சாட்சி :PW1 | |
| பெயர் : திரு.குருமகேந்திரன் | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. தொட்டன் | தொழில் : இரண்டாம் நிலை காவலர் |
| கிராமம் : திண்டுக்கல் | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 34/2026 |
| ( எதிரி ஆஜர், வழக்கறிஞர் ஆஜர்) | |

---

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1. நான் தற்போது திருச்சி மாவட்டம் வையம்பட்டி காவல்நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரி சுந்தர்ராஜ் என்பவரை தெரியும். காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.ராமலிங்கம், காவலர் காட்டுராஜா ஆகியோர்களை எங்களது காவல்நிலையத்தில் பணிபுரிந்த வகையில் தெரியும். கடந்த 17.10.2025 அன்று பகல் 01.00 மணியளவில் காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் ராமலிங்கம் அவர்கள் வையம்பட்டி காவல்நிலைய பொறுப்பிலிருந்தபோது காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் தலைமையில் நானும், காவலர் காட்டுராஜா ஆகியோர்கள் மதுவிலக்கு தொடர்பாக கருங்குளம் ஆசாத்ரோடு உள்ளிட்ட பகுதிகளில் ரோந்து சென்றோம். அப்போது சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் ராமலிங்கம் அவருக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் நிலைய அலுவலில் இருந்த எங்களை அழைத்துக்கொண்டு காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் கள்ளுப்பட்டியில் மகாலெட்சுமி பேக்கரி அருகே சென்ற போது அங்கு சென்று கண்காணித்த போது சந்தேப்படும் படியாக நின்றுக்கொண்டிருந்த ஆஜர் எதிரி நின்றுகொண்டிருந்தார். அவரை விசாரித்த போது அவரது பெயர் சுந்தரராஜ் என்றும் அவரது ஊர் கே.புதுக்கோட்டை என்பதும் தெரியவந்தது. எங்களை பார்த்ததும் தப்பி ஓடி முயற்சித்தவரை காவல் உதவி ஆய்வாளர் பிடித்து விசாரித்தார். அப்போது அவர் அரசு அனுமதி இல்லாமல், உரிமம் இல்லாமல் அரசு மதுபான மதுபாட்டில்களை மறைத்து வைத்து விற்பனை செய்ததாக தெரியவந்தது. தொடர்ந்து அவரது குற்றத்தை ஒப்புக்கொண்டவரை காரணம் கூறி கைது செய்து அவர் மறைத்து

வைத்திருந்த 180 ml அளவு கொண்ட Block Bearl பிராந்தி 27 பாட்டில்களையும், ஆஜர் எதிரி ஆஜர் செய்ய அதனை 13.30 மணியளவில் காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார். மேற்படி கைப்பற்றப்பட்ட தடய பொருட்களை வழக்கின் நலம் கருதி எங்கள் முன்னிலையில் அங்கே வைத்து அழித்தல் மகசரில் அழித்தார். தொடர்ந்து எதிரி நிலையம் அழைத்து வர நானும், காவலர் காட்டுராஜா, காவல் சிறப்பு உதவி ஆய்வாளருக்கு உதவியாக இருந்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசர் மற்றும் அழித்தல் மகசரில் உள்ள முதல் கையெழுத்துகள் என்னுடையதுதான். அவை முறையே அ.சா.ஆ.1 மற்றும் 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. காவல் சிறப்பு உதவி ஆய்வாளருக்கு எத்தனை மணிக்கு தகவல்கிடைத்தது என்றால் 01.00 மணிக்கு கிடைத்தது. கருங்குளத்தில் ரோந்தில் இருக்கும் போது தகவல் கிடைத்தது. காவல்நிலையத்திலிருந்து கிளம்பும்போது 01.15 மணியிருக்கும். கல்பட்டி மகாலெட்சுமி பேக்கரி என்பது தேசிய நெடுஞ்சாலையில் என்றால் சரிதான். அந்த ஏரியாவில் மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். எதிரி மதுபாட்டில்களை எங்கியிருந்து வாங்கினார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் சம்பவ இடத்தில் பார்வை மகசர், வரைபடம் தயார் செய்தாரா என்றால் இல்லை. வழக்கு எண்ணிக்கைகாக எதிரி மீது வழக்கு பதிவு செய்து எதிரி வழக்கில் உட்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. உண்மையிலியே நான் சொல்வதுபோன்று சம்பவம் நடந்திருந்தால் பொதுமக்களை சாட்சிகளாக விசாரித்திருப்போம் என்றால் சரியல்ல.

Taken over by me in open court read over
to the witness and admitted by the witness
to be correct.

Sd/-R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.

| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 18.08.2026 | |
| CC No. 53/2026 | |
| சாட்சி :PW2 | |
| பெயர் : திரு.காட்டுராஜா | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. அண்ணாச்சாமி | தொழில் : இரண்டாம் நிலை காவலர் |
| கிராமம் : வடமதுரை | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 47/2026 |
| ( எதிரி ஆஜர், வழக்கறிஞர் ஆஜர்) | |

---------------------------------------------------------------

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1. நான் தற்போது திருச்சி மாவட்டம் வையம்பட்டி காவல்நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரி சுந்தர்ராஜ் என்பவரை தெரியும். காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.ராமலிங்கம், காவலர் குருமகேந்திரன் ஆகியோர்களை எங்களது காவல்நிலையத்தில் பணிபுரிந்த வகையில் தெரியும். கடந்த 17.10.2025 அன்று பகல் 01.00 மணியளவில் காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் ராமலிங்கம் அவர்கள் வையம்பட்டி காவல்நிலைய பொறுப்பிலிருந்தபோது காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் தலைமையில் நானும், காவலர் காட்டுராஜா ஆகியோர்கள் மதுவிலக்கு தொடர்பாக கருங்குளம் ஆசாத்ரோடு உள்ளிட்ட பகுதிகளில் ரோந்து சென்றோம். அப்போது சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் ராமலிங்கம் அவருக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் நிலைய அலுவலில் இருந்த எங்களை அழைத்துக்கொண்டு காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் கள்ளுப்பட்டியில் மகாலெட்சுமி ஹோட்டல் அருகே சென்ற போது அங்கு சென்று கண்காணித்த போது சந்தேப்படும் படியாக நின்றுக்கொண்டிருந்த ஆஜர் எதிரி நின்றுகொண்டிருந்தார். அவரை விசாரித்த போது அவரது பெயர் சுந்தரராஜ் என்றும் அவரது ஊர் கே.புதுக்கோட்டை என்பதும் தெரியவந்தது. எங்களை பார்த்ததும் தப்பி ஓடி முயற்சித்தவரை காவல் உதவி ஆய்வாளர் பிடித்து விசாரித்தார். அப்போது அவர் அரசு அனுமதி இல்லாமல், உரிமம் இல்லாமல் அரசு மதுபான மதுபாட்டில்களை மறைத்து வைத்து விற்பனை செய்ததாக தெரியவந்ததது. தொடர்ந்து அவரது குற்றத்தை ஒப்புக்கொண்டவரை காரணம் கூறி கைது செய்து அவர் மறைத்து

வைத்திருந்த 180 ml அளவு கொண்ட Block Bearl பிராந்தி 27 பாட்டில்களையும், ஆஜர் எதிரி ஆஜர் செய்ய அதனை 13.30 மணியளவில் காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார். மேற்படி கைப்பற்றப்பட்ட தடய பொருட்களை வழக்கின் நலம் கருதி எங்கள் முன்னிலையில் அங்கே வைத்து அழித்தல் மகசரில் அழித்தார். தொடர்ந்து எதிரி நிலையம் அழைத்து வர நானும், காவலர் குருமகேந்திரன், காவல் சிறப்பு உதவி ஆய்வாளருக்கு உதவியாக இருந்தோம். என்னிடம் காட்டப்படும் **அ.சா.ஆ.1 மற்றும் 2 கைப்பற்றுதல் மகசர் மற்றும் அழித்தல் மகசரில் முதல் கையெழுத்துகள் என்னுடையதுதான்.** போலீசார் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. காவல் சிறப்பு உதவி ஆய்வாளருக்கு எத்தனை மணிக்கு தகவல்கிடைத்தது என்றால் 01.00 மணிக்கு கிடைத்தது. கருங்குளத்தில் ரோந்தில் இருக்கும் போது தகவல் கிடைத்தது. காவல்நிலையத்திலிருந்து கிளம்பும்போது 01.15 மணியிருக்கும். கல்பட்டி மகாலெட்சுமி பேக்கரி என்பது தேசிய நெடுஞ்சாலையில் என்றால் சரிதான். அந்த ஏரியாவில் மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். எதிரி மதுபாட்டில்களை எங்கியிருந்து வாங்கினார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் சம்பவ இடத்தில் பார்வை மகசர், வரைபடம் தயார் செய்தாரா என்றால் இல்லை. வழக்கு எண்ணிக்கைகாக எதிரி மீது வழக்கு பதிவு செய்து எதிரி வழக்கில் உட்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. உண்மையிலியே நான் சொல்வதுபோன்று சம்பவம் நடந்திருந்தால் பொதுமக்களை சாட்சிகளாக விசாரித்திருப்போம் என்றால் சரியல்ல.

Taken over by me in open court read over
to the witness and admitted by the witness
to be correct.

Sd/–R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.